අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/08/26/06/08/02

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2023.03.13

சுற்றிக்கை இலக்கம் - 05/2023

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்

சகல மாகாண/ வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

சகல மாகாண/ வலயக் கணக்காளர்கள்,

சகல பாடசாலை அதிபர்கள்

<u>டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்</u>

கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை ஊடாக பாடசாலைகள் மற்றும் கணினி நிலையங்களின் உதிரிப்பாகங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பாக தேசிய மட்டத்திலான செயற்பாடு 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைபடுத்தப்படுகின்றது. இந்த செயற்றிட்டத்திற்குரிய சுற்றிக்கை மற்றும் ஆலோசனை கடிதங்கள் பல்வேறு சந்தரப்பங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

02. சமகாலத்தில் பொதுக் கல்விக்குரிய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திற்காக விசேடமான செயற்பாடுகள் கல்வி அமைச்சு மூலமாக நிறைவேற்றி வருவதுடன், இந்த பணிகளை மிகவும் வினைத்திறனுடனும் வெளிப்படையாகவும் சிறப்பாக மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகள் அடங்கிய வழிகாட்டல் கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த வழிகாட்டல் கையேடு இந்த சுற்றிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த கையேட்டின் அறிவுரைகளுக்கு இணைவாக பொதுக் கல்வி முறைமைக்குள் டிஜிட்டல் கல்விக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றுவது அவசியமாகும்.

03. இந்த விடயம் தொடர்பாக நிலவும் பின்வரும் சுற்றறிக்கை மற்றும் ஆலோசனை கடிதங்கள் பின்வருமாறு மேலும் செயல்படுத்தப்படும்

i. 2008.04.04 ஆம் திகதிய 2008/14 ஆம் இலக்க சுற்றறிக்கை பாடசாலை கணினி ஆய்வு கூடங்களில் கணினி தொடர்புடைய வன்பொருள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சுற்றறிக்கை

ii. ED/01/26/07/01/01 மற்றும் 2010.09.16 ஆம் திகதிய வலய மட்டத்தில் நிறுவப்பட்டுள்ளவள வன்பொருள் மற்றும் வலையமைப்பு தீர்வுக்குழுவின் உறுப்பினர்களை வலய மற்றும் மாகாண தொழில்நுட்ப மதிப்பீடு நடவடிக்கைகளில்

இணைத்துக்கொள்ளும் அறிவுரை கடிதத்தில் “வன்பொருள் மற்றும் வலையமைப்பு தீர்வுக் குழு மற்றும் அதன் உறுப்பினர்கள்” என்பதற்கு பதிலாக “வலய டிஜிட்டல் கல்வி தொழில்நுட்பக் குழு” என திருத்தப்பட வேண்டும்.

iii. இலக்கம் 2010/23 மற்றும் 2010.06.28 ஆம் திகதிய சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணினி புதுப்பித்தலுக்குரிய தர அறிக்கைகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் மாதிரிக்கு மேலதிகமாக இந்த பணி தொடர்பாக பயன்படுத்தப்படும் இணையவழி மூலமான தர அறிக்கையும் செல்லுபடியாகும் தர அறிக்கையாக பயன்படுத்தலாம்.

04. மேலும், இந்த சுற்றறிக்கை தொடர்பாக வெளியிடப்பட்ட பின்வரும் சுற்றறிக்கை / அறிவுரை கடிதங்களை மீறி இந்த சுற்றறிக்கை மற்றும் இணையவழி கையேட்டின் அறிவுரைகள் பலம் வாய்ந்ததாகும்.

i. 2007.06.07 ஆம் திகதிய ED/01/26/02/46/01 ஆலோசனைக் கடிதம்

ii. 2008.04.08 ஆம் திகதிய மற்றும் ED/01/26/07/01/01 இலக்கத்தைக் கொண்ட ஆலோசனைக் கடிதம்

எம்.என். ரணசிங்க.
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் -

01. கணக்காய்வாளர்
02. சகல மேலதிக செயலாளர்கள்/ பணிப்பாளர் நாயகங்கள், கல்வி அமைச்சு
03. தலைமை நிதி அதிகாரி கல்வி அமைச்சு
04. சகல மாகாண / வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்குப் பொறுப்பான பிரதி / உதவிப் பணிப்பாளர்கள்
05. சகல தகவல் தொழில்நுட்ப தொலைக்கல்வி மைய ஆலோசகர்கள்